# இந்து வாழ்வியற் சடங்குளில் உளவியல்


**Supervisor**
*Mr. S. Muhunthan,*
*Senior Lecturer,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*

**Researcher**
*Ms. N. Reeha,*
*Discipline of Hindu civilization,*
*Faculty of Arts & Culture,*
*EUSL*


## ஆய்வுச் சுருக்கம்


இயற்கையோடு இயைந்து வாழ்க்கை நடத்திய மனிதன் இயற்கையினையே கடவுளாக வழிபட்டான். இயற்கையில் நடைபெற்ற சில தன்னிச்சையான செயற்பாடுகள் மனிதனை மிரள வைத்தன. அவற்றைக் கண்டு வியந்த மனிதன் அவற்றினை வணங்குவதன் மூலம் தனக்கு நன்மை கிடைக்கும் என நம்பினான். அந்த நம்பிக்கையின் வாயிலாக புனிதத் தன்மையோடு கூடிய சில செயற்பாடுகளில் ஈடுபட்டான். இச்செயற்பாடுகளே காலப்போக்கில் சடங்குகளாக உருவெடுத்தன. இறைநம்பிக்கை அச்சஉணர்வு தொழில்களில் நன்மையடைதல் போன்ற காரணங்களுக்காகச் சடங்குகள் மேற்கொள்ளப்படுகின்றன.

'இயற்கையிடமும் மரணத்திற்குப் பின் வரும் நிலையிடமும் மனிதன் கொண்ட அச்சமே வழிபாட்டிற்கு அடிப்படைக் காரணம்' என்கிறார் சிக்மன் பிராய்டு (Sigmund Fraud)[5].

மனித வாழ்வானது காலவோட்டத்தோடு இணைந்த பிறப்பு-இறப்பு-பிறப்பு சுழற்சித்தன்மை கொண்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் இடையில் இளமை, பருவமடைதல், முதுமை என்னும் வரிசையில் நிலைமாற்றங்கள் ஏற்படுகின்றன. உயிரியல் தளத்தில் ஏற்படும் இந்த நிலைமாற்றங்கள் இணைநிலையாக சமூக பண்பாட்டுத்தளத்தில் சடங்குகள் வழி வெளிப்படுகின்றன. மேலும், கூறுவதானால் உயிரியல் தளத்தைக் காட்டிலும் பண்பாட்டுத்தளத்தில் வாழ்வின் நிலைமாற்றங்கள் மேலும் நுண்மையாக்கம் பெற்றுப் பல்கிப் பெருகிவிடுகின்றன. ஒவ்வொரு நிலைமாற்றமும் ஒரு சடங்கு நிகழ்வோடு பண்பாட்டு வயப்படுகின்றன அல்லது சடங்குவயப்படுகின்றன[6].

சடங்கு என்பது மக்களால் மக்களுக்காக ஏற்படுத்தப்பட்டது. சமூகவாழ்க்கையை நெறிப்படுத்த ஏற்படுத்திக் கொண்ட ஒழுக்கம் என சடங்கினைக் குறிப்பிடலாம். தன்வாழ்க்கைப் பேரில் இயற்கை சக்திகளையும் பருவகால மாற்றங்களையும் தன்வயப்படுத்த மனிதன் கையாண்ட சில நடைமுறைகளே சடங்குகளாயின[7]. பழக்கவழக்கங்கள் காலப்போக்கில் சீரிய சிந்தனை, அறிவியற்கருவி ஆகியவை காரணமாகச் சமுதாயத்தில் முன்னேற்றம் ஏற்படும் பொழுது அவை சடங்காக மாறுகின்றன.

சடங்குகள் நிகழ்த்தப்படும் காலம், இடம், சூழல், தேவை, நோக்கம் போன்ற காரணிகளைக் கொண்டு அவற்றின் தன்மைகள் வேறுபடுகின்றன. பொதுவாக செயல் சார்ந்தது, நிகழ்த்துதல் சார்ந்தது, தன்னார்வம் (நனவு) சார்ந்தது, கருவிசாராதது (பகுத்தறிவற்றது), பொழுதுபோக்குத் தன்மை கொண்டதன்று, கூட்டுத்தன்மை வாய்ந்தது, சமூக உறவுகளை வெளிப்படுத்துபவை, புனைவிற்குரியது, முனைப்பான குறியீடுகள், உறைந்த குறியீடுகள், புனிதத்துடன் தொடர்புடையது என்ற பொது இயல்புகளைக் கொண்டுள்ளன[8].

சடங்கானது வாழ்வியற் சடங்கு, வழிபாட்டுச் சடங்கு, வளமைச் சடங்கு, மந்திரச் சடங்கு என நான்கு வகைப்படுகின்றது. அந்தவகையில், மட்டக்களப்பு ஆகமம் சார்ந்த, ஆகமம் சாராத வழிபாடுகளுடன் சடங்கு பின்னிப்பிணைந்துள்ளது. மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச


---

[5] சக்திவேல்,சு., (1996), **நாட்டுப்புற இயல் ஆய்வு**, ப.224.
[6] பக்தவத்சலபாரதி, (2008), **தமிழர் மானிடவியல்**, ப. 183.
[7] மௌனகுரு,சி., (1988), 'சடங்கிலிருந்து நாடகம்வரை', **Kilas,** ப.175.
[8] பக்தவச்சலபாரதி, (2008), மு.கு.நூ, ப.183-195.

வாழ்வியற் சடங்குகள் தொடர்பாக அறிந்து விளக்குதல் இவ்வாய்வின் நோக்கங்களில் ஒன்றாகும்.

உளவியல் (psychology) என்பது உள்ளத்தைக் குறித்த அறிவியலாகும். மனிதன் தன்னைத்தான் புரிந்துகொள்கின்ற நிலைப்பாட்டின் ஆரம்பமே உளவியலின் தோற்றத்திற்கு அத்திவாரமானது. 'மனிதனைப் பற்றிய உண்மைகளை விளக்கும் அறிவியல் துறைகளில் ஒன்றே உளவியல்' என John Dewey என்பவர் குறிப்பிடுகிறார்[9]. உளவியல் சார்ந்த அறிவியல் வரலாற்று நிகழ்வுகளையும் சமூகச் செயல்களையும் இலக்கியப் படைப்புக்களையும் ஆராயும் அறிவு இன்று பெரும் வளர்ச்சி கண்டுள்ளது.

அந்தவகையில், மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச மக்களின் வாழ்வியற் சடங்குகளில் உள்ளார்ந்தமாக உள்ள உளவியற் கூறுகளை இனங்கண்டு அவை தொடர்பான மதிப்பீடுகள், கோட்பாட்டு, அணுமுறைகள் அனைத்தையும் முறைப்படுத்தி இந்து வாழ்வியற் சடங்குகள் வெறுமனே ஆற்றுகையாக மட்டுமல்லாமல் அறிவியல் அம்சங்களையும் தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நிறுவும் ஒரு முயற்சியாகவே இவ்வாய்வு அமைந்துள்ளது.

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டமைந்துள்ளது. சடங்கு என்பது ஐதீகஙகள், நம்பிக்கைகள் என்பவற்றினால் கட்டியெழுப்பப்பட்டது என்பது கடந்தகாலப் புரிதலாகக் காணப்படுகின்றது. அவை பற்றிய இப்போது தேவைப்படும் புதிய உற்று நோக்கல்கள் தொடர்பான கோட்பாட்டு அணுகுமுறைகளை மதிப்பீடு செய்தல். இந்துக்களின் சடங்குமுறைகள், மந்திரங்களுடன் தொடர்புடைய செயற்பாடுகள் உளவியல் சார்தவை என்பதைக் கண்டறிதல், இந்து வாழ்வியற் சடங்குகள் வெறுமனே ஆற்றுகையாகவும், சமய நடைமுறைகளாகவும் இல்லாமல் அறிவியல் சார்ந்த விடயங்ளை தன்னகத்தே கொண்டுள்ளது என்பதை நிறுவுதல், மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச இந்துக்களின் வாழ்வியற் சடங்குகளை இனங்கண்டு அவற்றில் உள்ள உளவியற் கூறுகளை இனங்காணல்,இன்றைய நாகரிகம், தொழிநுட்ப வளர்ச்சி காரணமாக மறைந்துவரும் மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேச இந்துக்களின் வாழ்வியற் சடங்குகள், மாந்திரீகம் என்பவற்றையும் அவற்றில் உள்ள உளவியற் கூறுகளையும் வெளிக்கொணர்தல்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் கன்னன்குடாப் பிரதேசம் இவ்வாய்வின் எல்லையாக அமைகினறது. மட்டக்களப்பு மாவட்டம் ஏழு நிர்வாகப் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றில் மண்முனை மேற்கு நிர்வாகப் பிரிவின் கீழ் கன்னன்குடா, மண்டபத்தடி, கரைாக்கன்தீவு, கொத்தியாபுலை, இலுப்படிச்சேனை, தாண்டியடி, குறிஞ்சாமுனை, காயான்மடு, பருத்திச்சேனை போன்ற சுற்றியமைந்த கிராமங்களை உள்ளடக்கியதாக கன்னன்குடாப் பிரதேசம் காணப்படுகினறது. இப்பிரதேசத்தினை மையப்படுத்தியதாகவே இவ்வாய்வு இடம்பெற்றுள்ளது.

ஆய்வொன்றினை மேற்கொள்ளும் போது ஆய்வின் உண்மைத் தன்மையைப் பேணுவதல் என்பது ஆய்வின் மூலம் பெற்றுக் கொள்ளும் தரவுகளின் நம்பகத்தன்மையினைப் பொறுத்து அமைகின்றது. அந்தவகையில் ஆய்வுக்கான தரவுகளைச் சேகரித்தல் என்பது ஒரு நுட்பமாகக் காணப்படுகின்றது. பொதுவாகத் தரவுகள் இரண்டு வடிவங்களில் பெறப்படுகின்றன.

முதலாம் நிலைத் தரவுகளாக களாய்வின் மூலம் நேரடியாகச் சென்று பார்வையிடல், கலந்துரையாடல், உற்றுநோக்குதல், பேட்டிமுறை என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட விடயங்கள் எடுத்துக் கொள்ளப்பட்டன. இரண்டாம் நிலைத் தரவுகளாக, இந்துச் சடங்குகள் மற்றும் உளவியல் கோட்பாடுகள் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், ஆய்விதழ்கள், கட்டுரைகள் என்பன எடுத்துக் கொள்ளப்பட்டன. மட்டக்களப்பு கன்னன்குடாப் பிரதேசத்தினை ஆய்வெல்லையாகக் கொண்டு இப்பிரதேச மக்களால் கடைப்பிடிக்கப்படுகின்ற வாழ்வியற் சடங்குகளில் உள்ளார்ந்தமாக இளையோடியுள்ள உளவியல் அம்சங்களை மையப்படுத்தியதாக அமைந்த இவ்வாய்வானது விவரண ஆய்வாகும்.

[9] சக்திவேல்,சு., (1996), மு.கு.நூ, ப. 410.